Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

12.12.2020 சனிக்கிழமை தொடர்புக்கு 076 584 2222

# உடுவில் முடக்கப்படுமா?

**பி.சி.ஆர். முடிவுகளின் பின் இன்று இரவு தீர்மானம்!**

**சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்.மருதனார்மடம் சந்தையை முடக்குவதா அல்லது உடுவில் பகுதியை முடக்குவதா என்பது தொடர்பில் இன்றிரவு பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின்பின்னர் தீர்மானிக்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் 02

## 2021லிருந்து பேக்கரி உற்பத்திகளின் விலைகளை அதிகரிக்க முடிவு

கொழும்பு, டிசெ. 12

உற்பத்திச் செலவு அதிகரிப்புக் காரணமாக அடுத்த வருடம் தொடக்கம் பேக்கரி உற்பத்திகளின் விலையை 02

## 60 வயதை கடந்த 91 பேர் சாவு

கொழும்பு, டிசெ. 12

இலங்கையில் கொரோனாத் தாக்கத்தின் 2ஆவது அலையில் கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதி தொடக்கம் நேற்றுவரை 134 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 91 பேர் 60 வயதைக் 02

## 22 ஆம் திகதி முதல் நாடு முடக்கப்படுமா?

*இராணுவத் தளபதி விளக்கம்*

கொழும்பு, டிசெ. 12

நத்தார் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை. எனினும், மக்களின் செயற்பாடுகள் மூலமாக புதிய கொத்தணி 02



## வவுனியாவில் தொற்றையடுத்து சாளம்பைக் கிராமம் தற்காலிக முடக்கம்

**மூடப்பட்டன கடைகள் உட்செல்ல, வெளியேற தடை**

**வவுனியா, டிசெம்பர் 12**

**வவுனியா புதிய சாளம்பைக்குளம் கிராமம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் தற்காலிகமாக முடக்கப்பட்டது. அந்தக் கிராமத்துக்குச் செல்லும் மூன்று வீதிகளிலும் இரும்புக் கேடரால் வீதித் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் கிராமத்திலிருந்து எவருமே வெளியேறமுடியாது.** 02

## முஸ்லிம்களும் குரல்கொடுங்கள்

*மனோ வலியுறுத்து*

கொழும்பு, டிசெ. 12

அரசியல் கைதிகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பாக, முஸ்லிம் அரசியல் தலைமைகள் குரல்கொடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற 02

## நடு வீதியில் தீக்குளிப்பேன்!

*பூச்சாண்டி காட்டுகிறார் அம்பிட்டிய தேரர்*

மட்டக்களப்பு, டிசெ. 12

மட்டக்களப்பில் வாழ்வதையிட்டு வெட்கமடைகின்றேன். நகரின் பிரதான வீதியில் வெகுவிரைவில் தீக்குளிப்பேன் என்று அம்பிட்டிய சுமணரத்ன 02

## யாழ்.வந்தார் செயலணியின் பணிப்பாளர்

கொழும்பு, டிசெ. 12

பல நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் திட்டத்தை பல நோக்கு அபிவி 02



## தனியார் மருத்துவமனையிலும் கொரோனா சிகிச்சைக்கு ஆராய்வு

கொழும்பு, டிசெ. 12

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நபர்கள், அவர்களின் விருப்பத்துக்கு அமைய தனியார் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சைபெற அனுமதி வழங்குவது தொடர்பாக அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இவ்வாறு தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு சாதாரண விடுதிகளில் தங்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் தனியார் மருத்துவமனைகளுக்கு வெளியில் கொரோனாத் தொற்றாளர்கள் தங்கி சிகிச்சை பெறுவதற்கான சிகிச்சை நிலையங்களை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு 02

## கொரோனா பானத்தை கைதிகளிடம் பரிசோதிக்கிறது இலங்கை அரசு!

கொழும்பு, டிசெ. 12

கேகாலை மருத்துவரால் கண்டுபிடிக்கப்பட்டு, அரசு உத்தியோகபூர்வமாக அனுமதியளிக்காத கொரோனா பானத்தை கைதிகளுக்கு வழங்கி பரிசோதனை நடத்தத் தீர்மானிக்கப் 02

## இந்திய மீனவர் விவகாரம் 22, 30 ஆம் திகதிகளில் பேச்சு

கொழும்பு, டிசெ. 12

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையிலான துறைசார் பேச்சுக்கள் எதிர்வரும் 22ஆம் மற்றும் 30ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்புக்குள் வருகின்ற இந்திய கடற்றொழிலாளர்கள், இலங்கையில் தடை செய்யப்பட்ட இழுவை வலை தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கடல் வளங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் 02

## பேக்கரி...

அதிகரிக்க எதிர்பார்த்துள்ளது என அகில இலங்கை பேக்கரி உரிமை யாளர்கள் சங்கம் தெரிவித்துள் ளது. இறக்குமதி வெண்ணெய்க்கு (மாஜரின்) இதுவரை காணப்பட்ட 200 ரூபா வரியை அரசு 600 ரூபாவாக அதிகரித்துள்ளது என் றும் அதனாலேயே பேக்கரி உற்பத்திச் செலவு அதிகரித்துள் ளது என்றும் இது குறித்து அதிகாரி களுக்கு அறிவிக்கப்படும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது. (தஜ)

## 60 வயதை...

கடந்தவர்கள் என்று சுகாதார அமைச்சின் தரவுகள் தெரிவிக் கின்றன.
கொரோனா வைரஸ் தாக்கத்தால் 10 - 30 வயதுக்கு இடைப்பட்ட மூவரும், 31 -40 வயதுக்கு இடைப் பட்ட நால்வரும், 41-50 வயதுக்கு இடைப்பட்ட 13 பேரும், 51 -60 வயதுக்கு இடைப்பட்ட 22 பேரும், 61-70 வயதுக்கு இடைப் பட்ட 27 பேரும், 74 வயதுக்கு மேற்பட்ட 64 பேரும் இதுவரை உயிரிழந்துள்ளனர்.
இலங்கையில் கொரோனா வைரஸ் 2ஆவது அலை காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை 27ஆயிரத்து 743 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. மினுவாங்கொட கொத்தணிமூலம் 3 ஆயிரத்து 59 பேருக்கும், பேலியகொட கொத்த ணி மூலம் 24 ஆயிரத்து 648பேருக் கும் வைரஸ் தொற்றியுள்ளது.
இவர்களில் 22 ஆயிரத்து 830 பேர் குணம டைந்துள்ளனர் என்று தரவுகள் குறிப்பிடுகின்றன. (த-44)

## முஸ்லிம்களும்...

உறுப்பினர் மனோ கணேசன் வலியு றுத்தியுள்ளார்.
தனது முகநூல் பக்கத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தொடர் பிலும், தடுப்புக்காவலில் உள்ள ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தொடர்பிலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசி வருகின்றனர். அதற்கு இணை யாக முஸ்லிம் அரசியல் தலைமைக ளும், தமிழர்களின் பிரச்சினை களுக் காகக் குரல் கொடுக்கவேண்டும். என்று குறிப்பிட் டுள்ளார். (த-இ)

## யாழ்.வந்தார்....

ருத்தி செயலணி திணைக்களம் ஆரம் பித்து நாடு முழுவதும் நடைமுறைப்ப டுத்தி வருகின்றது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள பயிற்சித் திட்டத்தின் தற்போ தைய நிலைமைகள் தொடர்பாக கலந்து ரையாடுவதற்காக செயலணி திணைக்க ளத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் நந்தன மல்லவராட்சி பயணம் மேற்கொண்டிருந்தார்.
கலந்துரையாடலில் மாவட்ட செயலர் க.மகேசன், மேலதிக மாவட்டச் செயலர் ம. பிரதீபன், பல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் கட்டளை அதிகாரி பி.ஏ. விக்கிரமசிங்க மற்றும் மாவட்ட உதவிப்பணிப்பாளர் கப்டன் நிஷாந்த் உட்பட பலர் கலந்துகொண்ட னர்.
இலங்கைக்கு வெளிநாடுகளில் இருந்தே பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின் றன. இந்த நிலைமையை மாற்றியமைக்க தற்போது தெரிவுசெய்யப்பட்ட அலுவ லர்கள் ஊடாக மொடல் பார்ம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்று அவர் தெரி வித்துள்ளார். (த-20)

# சாளம்பைக் கிராமம்...

அவ்வாறே எவரும் உட்செல்லவும் முடியாது. வீட்டில் உள்ளவர்கள் கூட வெளியேறமுடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.
புதிய சாளம்பைக் குளத்தைச் சேர்ந்த 28வயதுடைய தாயும் அவரது 5வயதுடைய மகளும் கொழும்பிலிருந்து வந்து தமது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டி ருந்தனர். அவர்களுக்கு நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோத னையில் கொவிட் 19 தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்தநி லையில் மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
வீடுகளிலிருந்து எவருமே வெளியே றக்கூடாது என்று பொலிஸார் ஒலிபெருக்கியில் அறிவித்தல் விடுத்துள்ளனர். கொரோனாத் தொற்றாளர்களுடன் நெருக்கமா கப் பழகியவர்கள் என்ற அடிப்ப டையில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்டவர்களி டம் இன்று பி.சி.ஆர். பரிசோ தனை மேற்கொள்ளப்பட்டது.
அதன் பெறுபேறுகள் இன்று இரவு வெளியாகும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
அந்தக் கிராமத்தில் சுமார் 362 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத் துக்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர்.
பொலிஸார் வீதித்தடை ஏற்படுத்தி கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.
எனினும், முற்பகல் வீதித்தடை ஏற்படுத்தி முடக்கப்படுவதற்கு முன்னரே பலர் தொழில் நிமித்த தும் வேறு தேவை கருதியும் கிரா மத்தைவிட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அது பற்றிய அடுத்தகட்ட நடவடிக்கை ஆராயப்படுகின்றது. (த-110,18)

# இந்திய மீனவர் விவகாரம்...

இலங்கை கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப் பட்டு வருகின்றது.
மீனவர்கள் எல்லை தாண்டும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவ தற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், காத்திரமான பலன் கிடைக்கவில்லை. இந்த நிலையில், 2016 மற்றும் 2018 ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற இரண்டு நாடுக ளுக்கிடையிலான பேச்சுக்களை மீளஆரம்பித்து, நிரந்தரத் தீர்வு காண இணக்கம் காணப்பட்டுள்ளது. (த-இ)

## கைதிகளிடம்....

பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
கேகாலையைச் சேர்ந்த தம்மிக்க பண்டார என்பவர் அந்தப் பானத்தைத் தயாரித்திருந்தார். சிறைக் கைதிக ளில் கொரோனா தொற்றுக்கு இலக்காகியவர்களுக்கு அதை வழங்கி பரிசோதிக்க சுகாதார அமைச்சு தீர்மா னித்துள்ளது என்று அறியமுடிகின்றது.
இதற்கு கொரோனா ஒழிப்பு படையணியும் இணங்கி யுள்ளது எனக் கூறப்படுகின்றது.
இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியி ருந்த 21 பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்தப் பானம் வழங்கப்பட்டது என்றும் அவர்களில் 14 பேர் குணம டைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (தஜ)

# 22 ஆம் திகதி முதல்....

யொன்று உருவாகும் பட்சத்தில் கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டிய நிலை ஏற்படும் என்று கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதி யுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இன்று தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"பண்டிகைக் காலத்தில் தனிமைப்படுத்தல் ஊர டங்கு நடைமுறைப்படுத்தப்படுமா, தனிமைப்ப டுத்தல் இடம்பெறுமா என மக்கள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வினவுகின்றனர்.
நாட்டை முடக்குமாறு சிலர் ஆலோசனை வழங்கு கின்றனர். அவ்வாறு செய்யவேண்டாம் என மேலும் சிலர் கோரிக்கை விடுக்கின்றனர்.
எனினும், டிசெம்பர் 22 ஆம் திகதி தொடக்கம் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை பிறப்பிப்பதற்கோ, தனிமைப்படுத்தல்களை செய்வதற்கோ இன்று காலைவரை எவ்வித முடி வும் எடுக்கப்படவில்லை.
டிசெம்பர் 22 என்ற காலப்பகுதிக்கு இன்னும் 10 நாள்கள்வரை இருக்கின்றன. எனவே, மக்களின் செயற்பாடுகள் மூலமாக புதியதொரு கொத்த ணியோ அல்லது கொழும்பில் தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தாலோ வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை களை முன்னெடுக்க நேரிடும்." என்றார். (த-44)

## தனியார்....

ஏற்படுத்த தேவையான நடவ டிக்கைகளை எடுக்குமாறு தனியார் மருத்துவமனைக ளுக்கு ஆலோசனை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள் ளது என்று தெரிவிக்கப்படுகின் றது. (த-இ)

## நடு வீதியில்....

தேரர் தெரிவித்துள்ளார்.
காணொலி ஒன்றில் அவர் மேலும் தெரிவிப்பதாவது:
மங்களகம பொலிஸ் நிலை யத்திலேயே அதிகளவான வழக்குகள் எனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள் ளன. திசாநாயக்க என்ற அதிகாரியே கூடுதலான வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார். ஒரு சம்ப வத்தை நான்காகப் பிரித்து வழக்குத் தாக்கல் செய்துள் ளார். பன்குடாவெளி விகாரையை மீளக்கையளிக்க முடியாது என்று செங்கலடி பிரதேச செயலர் எனக்குக் கடிதம் மூலமாக அறிவித்துள் ளார். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெற் றுத் தருமாறு கேட்கின்றேன்.
மட்டக்களப்பில் பௌத்த மதத்தைப் பாதுகாக்குமாறு கேட்கின்றேன். என்று குறிப்பிட்டுள்ளார். (தஜ)



## உடுவில் ....

ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
மருதனார்மடம் சந்தையில் மரக்கறி வியாபா ரத்தில் ஈடுபடுபவரும், முச்சக்கரவண்டிச் சாரதியுமான நபருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து, அவரு டன் நெருக்கமாகப் பழகினர் என்ற அடிப்ப டையில் 394 பேருக்கு இன்று பி.சி.ஆர். பரி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இன்று இரவு முடிவுகள் வெளியாகும். அதன் பின்னரே முடக்கம் பற்றி முடிவுசெய்யப்படும் என்று பணிப்பாளர் தெரிவித்தார்.
நேற்றைய தொற்றாளருடன் நெருங்கிப் பழகி னர் என்ற அடிப்படையில் இன்று முற்பகல் 394 பேரிடம் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டுள் ளன. அவற்றின் பரிசோதனை முடிவுகளின் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்ப டும் என்றும் பணிப்பாளர் தெரிவித்தார்.
கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்ட நபர், முச்சக்கரவண்டி மற்றும் படி வாகனம் வைத்திருப்பவர்.
பல இடங்களுக்கும் சென்றுவருபவர். சந்தை யில் மரக்கறிகள் ஏலம் விடும் பகுதியிலும் நடமாடுபவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
சுன்னாகம் பிரதேச சபை அலுவலகத்தின் பின்புறமாக அவர் வசித்துவருகின்றார். அவ ருக்கு ஏற்கனவே காய்ச்சல் மற்றும் தடிமன் ஏற்பட்டிருந்தும் அவற்றுக்கு அவர் சிகிச்சை பெறாது இருந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படு கின்றது. (த-26,20)

# உள்ளூர் ஆடை உற்பத்தி மேம்பாட்டுக்குக் கூட்டம்

மட்டக்களப்பு, டிசெ.12



கைத்தறி மற்றும் உள்ளூர் ஆடை வடிவமைப்பு உற்பத்தி தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் கைத்தறி மற்றும் உள்ளூர் ஆடை வடிவமைப்பு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்கும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கும் இடையே இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் இயங்கி வந்த கைத்தறி நெசவு நிலையம் மூடப்பட்டு, அம்பாறை மாவட்டத்துக்கு மாற்றப்பட்டுள்ளமை மற்றும் அதை மீளப் புனரமைத்து புதிய வடிவமைப்புடன் ஆரம்பிப்பது தொடர்பாக அதில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தத் தொழில்துறை தொடர்பான பயிற்சிகளை, போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்கி, சுயதொழில் வாய்ப்பை அதிகரிக்கச் செய்து அவர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கைத்தறி, புடவைக் கைத்தொழில் மற்றும் கைவினைப் பொருள்கள் உற்பத்தி தொடர்பாகவும், அவற்றுக்கான சந்தை வாய்ப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ற-இ)

## சிறு வணிக முயற்சிக்கு அமெரிக்கா 3.6 பில். நிதி!

கொழும்பு, டிசெ.12

இலங்கையிலுள்ள சிறு வணிக முயற்சிகளுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்கா உதவித் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டம், 3.6 பில்லியன் ரூபா பெறுமதியானது என்று இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக சிறுவணிக முயற்சிகளுக்கு அவசியமான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், நிலைபேறான பொருளாதார வளர்ச்சியில் தனியார் துறையினரின் பங்களிப்பை வலுப்படுத்துதல் மற்றும் வணிகங்களின் இலாபத்தை அதிகரித்தல் ஆகியவற்றுக்கு பங்களிப்புச் செய்வதற்கான கடப்பாடு, அமெரிக்காவின் இந்தச் செயற்றிட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். (ற-இ)

## சுதேச மருந்து தயாரிப்புக்கு சர்வதேச அழுத்தம் ஏற்படும்

*வாசுதேவ தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.12



கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்குத் தயாரிக்கப்பட்டுள்ள சுதேச மருந்து வெற்றியளித்தால் தடுப்பூசிகள் போன்ற மருந்துகளை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு இது அச்சுறுத்தலாக இருக்கும்.

அதனால் சர்வதேச அழுத்தங்கள் உருவாகும் என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். கேகாலையைச் சேர்ந்த மருத்துவர் தம்மிக பண்டார கண்டுபிடித்த ஆயுர்வேத மருந்துக்கு எதிரான விமர்சனங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (வ-இ)



## சுகாதார மீறல் 33 பேர் கைது!

கொழும்பு, டிசெ.12

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை முகக்கவசம் அணியத் தவறியமை மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இதுவரை ஆயிரத்து 289 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோகண தெரிவித்துள்ளார். (வ-இ)



## சடலம் எரிப்பதற்கு எதிராக போரட்டம்

புத்தளம், டிசெ.12

இலங்கையில் கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை எரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தளத்தில் தீப்பந்தம் ஏந்தி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டே இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-இ)

## வாகன இறக்குமதித் தடை: தளர்த்தும் தேவை இல்லை

*அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.12

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையைத் தளர்த்துவதற்கான தேவை இதுவரை ஏற்படவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

தேசிய காரணங்களை முன்னிலைப்படுத்தியே இந்தத் தடை விதிக்கப்பட்டது. இதனால் வாகன சந்தைக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்பட சாத்தியம் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

## விமானப்படைக்கு கதிரியக்க கருவி!!

கொழும்பு, டிசெ.12

விஷேட கதிரியக்க பொருள் கண்டறிதல் மற்றும் கதிரியக்க அளவீட்டு கருவி தொகுதி ஆகியவற்றை இலங்கை விமானப்படைக்கு சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின் உற்பத்தி திட்ட அபிவிருத்தி அமைச்சர் துமிந்த திசாநாயக்க வழங்கியுள்ளார்.

இந்த நன்கொடையை கொழும்பில் உள்ள அமைச்சில் வைத்து விமானப் படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன பெற்றுக்கொண்டார்.

இந்தக் கருவிகளின் திறனைக் கொண்டு இலங்கை சர்வதேச விமான நிலையங்கள் மூலம் அணு சக்தி மற்றும் கதிரியக்கப் பொருள்களின் கண்டறிதலே விமானப் படையின் முக்கிய நோக்கமாகும்.(றஇ)



## பட்ஜெட் விடயங்களை செயற்படுத்த முடிவு

கொழும்பு, டிசெ.12

2021 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கான கடன் சலுகை, சூரியசக்தி மின்சார வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான கடன் சலுகை, பிரிவெனாக்களில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தேரர்களுக்கான சலுகைகள், கொவிட்19 தொற்றால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் மத்தியதர வர்த்தக செயற்பாடுகளுக்கான மூலதனக் கடனைப் பெற்றுக் கொடுத்தல் ஆகியன உடனடியாக செயற்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற-இ)

# உடல் அடக்கம் தொடர்பில் விஞ்ஞான முடிவு அவசியம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.12

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவரின் உடல்களை அடக்கம் செய்வது தொடர்பில் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்துவது அத்தியாவசியமானது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்குத் தேவையான நடைமுறைகள் தொடர்பில் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அந்தச் சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார். (வ-இ)

## 10,000,00 பி.சி.ஆர்.

கொழும்பு, டிசெ.12

நாட்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை 10 இலட்சத்தை நெருங்கியுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. நேற்று மட்டும் 17 ஆயிரத்து 425 பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை 9 லட்சத்து 88 ஆயிரத்து 964ஆக அதிகரித்துள்ளது. (வ-இ)

## விவசாய காணிக்குள் நுழைய மீளவும் தடை

மட்டக்களப்பு, டிசெ.12

குச்சவெளி விவசாய காணிகளில் பிரவேசிக்க தொல்பொருள் திணைக்களத்துக்கு விடுக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவு 2021 பெப்ரவரி மாதம் 3ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று எடுக்கப்பட்டபோதே இடைக்கால தடை உத்தரவு நீடிக்கபட்டது. (வ-40)



## தொற்றுப் பரவும் சந்தர்ப்பம் மேல் மாகாணத்தில் அதிகம்

கொழும்பு, டிசெ.12

மேல் மாகாணத்தில் கொரோனாத் தொற்று பரவக்கூடிய சந்தர்ப்பம் அதிகம் உள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அச்சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே இதனைத் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் வைரஸ் அதிகமாக பரவினாலும் புதிய நோயாளிகள் மற்ற பகுதிகளிலும் பரவலாக அடையாளம் காணப்படுகின்றனர்.

நாட்டில் இதுவரை 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பண்டிகைக் காலத்தில் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## வர்த்தக மையத்தில் நீதி அமைச்சு!

கொழும்பு, டிசெ.12

அடுத்த ஆண்டு தொடக்கம் நீதி அமைச்சை உலக வர்த்தக மையத்துக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதையடுத்து உலக வர்த்தக மையத்தின் 35 ஆயிரத்து 71 சதுர அடி பரப்பளவு அடுத்த ஆண்டு ஜனவரி 1 முதல் 2022 டிசெம்பர் 31 வரை அமைச்சுக்கு வாடகைக்கு விடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-இ)

## வறிய விவசாயிகளுக்காக கண்டியில் பழ உற்பத்தி

கண்டி, டிசெ.12

கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி, கம்பளை, உடுநுவர மற்றும் ஹேவாஹெட்ட ஆகிய 4 ஏற்றுமதி வலயங்களில் ஏற்றுமதி வர்த்தகத்தை இலக்காகக் கொண்டு பழ உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தில் 2 ஆயிரம் குடும்பங்கள் உள்வாங்கப்படும் என்றும், இதற்காக உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் 700 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-இ)

## 8 கர்ப்பிணிகளுக்கு கொரோனா

களுத்துறை, டிசெ.12

களுத்துறை, அட்டலுகம பிரதேசத்தில் சுமார் 80 கர்ப்பிணிப் பெண்களுக்கு ரப்பிட் என்டிஜன் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

அதில் 8 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது என பொது சுகாதார பரிசோதகர்களின் ஒன்றியத்தின் செயலாளர் மஹேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார். (வ-இ)

## கொழும்பில் முடக்கப்பட்ட சில இடங்கள் விடுவிப்பு!!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12

கொழும்பு நகரின் சில பகுதிகளில் தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு இன்று காலை வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரின் மட்டக்குளிய ரன்திய உயன, மோதரை, மெத்சந்த செவன, முகத்துவாரம், மிஹிஜய செவன, கிராண்ட்பாஸ், சமகிபுர, தெமட்டகொடை, மிஹிந்துசெத்புர ஆகிய தொடர்மாடி குடியிருப்புக்களே தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். (ற-இ)

## ஏழு கிராமங்களுக்கு போக்குவரத்து தடை

கொழும்பு, டிசெ.12

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக காலி மாவட்டத்தில் 7 கிராமங்களுக்கு கடுமையான பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று காலி மாவட்ட தொற்று நோயியல் நிபுணர் மருத்துவர் வெனுர கே.சிங்காரச்சி தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் 25 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்தே இந்தப் பயணத்தடை விதிக்கப்பட்டது. மிலித்துவ, கோன்கஹ, தலாபிடிய, தங்கெதர கிழக்கு, தெத்தூகொட வடக்கு, தெத்தூகொட தெற்கு மற்றும் மகுலுவ ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கே பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் வசிப்பவர்கள் அனைவரும் மறு அறிவித்தல் வரை வீட்டில் இருந்து வெளியேற முடியாது என்று மருத்துவர் வெனுர கே.சிங்காரச்சி மேலும் கூறியுள்ளார்.(ற-இ)

## விதிகளை மீறிய பஸ்களின் அனுமதி ரத்து!

கொழும்பு, டிசெ.12

சுகாதாரச் சட்டங்களை மீறிய 30 க்கும் மேற்பட்ட தனியார் பேருந்துகளின் அனுமதிப் பத்திரங்களை அரசாங்கம் ரத்து செய்துள்ளது என இராஜாங்க போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. (வ-இ)





## வாஸ் குணவர்தனவுக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, டிசெ.12

வெலிகடை சிறைச்சாலையிலுள்ள முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து அவர் சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (வ-இ)

## வயல் பகுதியில் கைக்குண்டு மீட்பு

மருதங்கேணி, டிசெ.12

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கு உட்பட்ட சங்கத்தார் வயல் பகுதியில் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டது.

குறித்த காணியில் கைக்குண்டு இருப்பதை அவதானித்த இளைஞர் ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு வருகை தந்த இராணுவத்தினர் குண்டை மீட்டுள்ளனர். (ஐ-160)

# கொரோனா அச்சம்; பயணிகள் மீது சோதனை

சாவகச்சேரி டிசெ.12

வெளி மாவட்டங்களில் இருந்து பேருந்துகளில் வருவோர், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தின், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இறக்கப்பட்டு, சுகாதார நடைமுறையுடன் பயணிப்பதை உறுதிப்படுத்திய பின்னரே பயணிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு எழுதுமட்டுவாழ் பொலிஸ் சோதனைச் சாவடியில் இடம்பெற்றது. சுகாதாரப் பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போதுமுகக்கவசம் அணியாமல் பயணித்த பயணிகள், வாகனங்களின் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்களுக்கு எழுந்தமான பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-9)

## வழமைபோன்று இயங்கும் வேலைவாய்ப்பு பணியகம்

### பூட்டு என்ற தகவல் வதந்தி

கொழும்பு, டிசெ.12

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வழமையான செயற் பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பணியாற்றும் சாரதி ஒருவருக்கு கொவிட் 19 வைரஸ் தொற்று ஏற்பட்டதை அடுத்து, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் காலவரையறை இன்றி மூடப்பட்டுள்ளது என்று பரவி வரும் செய்தி உண்மைக்குப் புறப்பானது என்று அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பணியகத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 24 மணித்தியாலமும் செயற்படும் தகவல் பீடம் உள்ளிட்ட அத்தியவசிய சேவைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன.

மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களிலும் வழமை போன்று சேவைகள் இடம் பெற்று வருகின்றன என்றும் அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது. (ற-இ)

## த.ம.வி.புலிகள் கட்சிக்கு 5 புதிய உறுப்பினர்கள்!!

மட்டக்களப்பு, டிசெ.12

மட்டக்களப்பு மாநகர சபையின் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பழைய உறுப்பினர்கள் ஐந்து பேருக்கு பதிலாக, ஐந்து புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுழற்சி முறையில் நியமனம் வழங்கும் நடைமுறைகளுக்கு அமைவாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து அது தொடர்பான ஆவணங்கள், நேற்று மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எம்.தயாபரனிடம் ஒப்படைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகரசபையின் வளர்ச்சிக்காக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளிலும் நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்று மாநகர ஆணையாளரிடம் புதிய உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

கட்சி பேதங்களுக்கு அப்பால் மாநகர நலனில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என மாநகர ஆணையாளர் இதன் போது வேண்டுகோள் விடுத்தார். (ற-இ)

## 39 தேசிய அடர்ந்த காடுகள் அழிவடையும் அபாயத்தில்!

### சூழலியல் கற்கைகள் நிலையம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12

இலங்கையில் மேற்கொள்ளப்படும் முறையற்ற அபிவிருத்திப் பணிகளால் சிங்கராஜா உட்பட 39 தேசிய அடர்ந்த காடுகள் அழிவுக்கு உட்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன என்று சூழலியல் கற்கைகள் நிலையம் தெரிவித்துள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பொருட்படுத்தாமல் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாகவே இந்த அபாயம் ஏற்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் 16 சதவீதமாகக் காணப்பட்ட அடர்ந்த காடுகள், 2030 ஆம் ஆண்டளவில் 10 சதவீதம் வரை குறைவடையும் அபாயம் உள்ளது.

அதிகரித்து வரும் காடழிப்பால் 103 ஆறுகளும், அதிகமான குளங்களும் வற்றிப்போகும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளன எனவும் சூழலியல் கற்கைகள் நிலையம் தெரிவித்துள்ளது. நாட்டின் வளங்களை அடுத்த சந்ததியினருக்கும் வழங்கக்கூடிய வகையில், நிலை பேறானஅபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் எனவும் அந்த நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ற-இ)





பிரதமர் மஹிந்த ராஜபக்ச பெல்லன்வில ரஜ மஹா விகாரையில் நேற்று வழிபாட்டில் ஈடுபட்டார். விகாரையின் விகாராதிபதி பெல்லன்வில தம்மரதன தேரரை சந்தித்து ஆசிர்வாதமும் பெற்றுக் கொண்டார். (வ-இ)

# கல்வியை பாதுகாக்க கோரி கொழும்பில் கவனவீர்ப்பு

கொடிகாமம் டிச 12

மாணவர்களின் கல்வியைப் பாதுகாக்கக்கோரி, கல்வி அமைச்சுக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் ஆகியன இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தன.

மாணவர்களின் கல்வி பாதிப்புக்கு உடன் தீர்வைப் பெற்றுக் கொடு! அனைத்து மாணவர்களுக்கும் இணைய வழிக் கல்வியை இலவசமாக பெற்றுக் கொடு! மாணவர்களின் கல்விக்கான இலத்திரனியல் ஊடகத்தின் சந்தர்ப்பத்தை அதிகரிக்கச் செய்! போன்ற காரணங்களை முன்வைத்து அந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ப-159)





## உயிருடன் பிடிபட்டது முதலை

தென்மராட்சி, டிசெ.12

வெள்ளத்துடன் கிராமத்துக்குள் புகுந்த முதலை ஒன்று, கிராம மக்களால் பிடிக்கப்பட்ட சம்பவம் தென்மராட்சி, ஜே/345 கிராம அலுவலர் பிரிவில் மந்துவில் கிழக்கு காரைக்காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. நேற்று அதிகாலை நாய் குரைத்த போது வீட்டு உரிமையாளர் லைற் அடித்து பார்த்துள்ளார். வீட்டு முற்றத்தில் முதலை இருப்பதைக் கண்ட உரிமையாளர் அயலவர்களின் உதவியுடன் முதலையைப் பிடித்து நைலோன் கயிற்றால் இறுகக் கட்டினார். அது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கப்பட்டது. விரைந்து செயற்பட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறித்த முதலை கிராமத்தில் இருந்து மீட்டுச் சென்றனர். (ப-159)

# தடுப்பூசியை பகிரங்கமாக செலுத்திக் கொள்வேன்

## ஐ.நா பொதுச்செயலர் உறுதி

நியூயோர்க், டிசெ. 12

கொரோனாத் தடுப்பூசியை பகிரங்கமாகவே செலுத்திக்கொள்வேன் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் அந்தோனியோ குத்தேரஸ் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா தலைமைச்செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

தடுப்பூசி என்பது நாம் நமக்கு வழங்குவது மட்டுமல்ல. நாம் ஒவ்வொருவரும் தடுப்பூசி போட்டுக்கொள்வது முழு சமூகத்துக்கும் ஒரு சேவையை வழங்குகிறது. ஏனென்றால், நாம் தொற்று நோயை இனி பரப்பும் நிலையில் இருந்து மாறுகின்றோம். நோய் பரவும் ஆபத்தும் இல்லை. எனவே தடுப்பூசி போட்டுக்கொள்வது என்பது நம் அனைவருக்கும் தார்மீகக் கடமை. தடுப்பூசி உலகளாவிய பொதுநன்மைக்காக எல்லா இடங்களிலும் குறிப்பாக ஆபிரிக்க நாடுகளிலும் கிடைக்க வேண்டும் என்றார். (மவஇ)



# ஒரே நாளில் 3,000 இறப்பு

நியூயோர்க், டிசெ. 12

அமெரிக்காவில் ஒரே நாளில் 3ஆயிரத்து 54 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்கள் என அமெரிக்காவில் மாநில அளவிலான கொரோனா வைரஸ் தரவைக் கண்காணிக்கும் திட்டத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த புதன்கிழமை இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. இதுவே இதுவரையான நாள்களில் அங்கு பதிவான மிக உயர்ந்த கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை ஆகும். இதற்கு முன்பு மே மாதம் 7ஆம் திகதி ஒரே நாளில் அதிகளவாக 2 ஆயிரத்து 769 உயிரிழப்புகள் பதிவாகின.

அமெரிக்காவில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றால் ஒரு கோடியே 52 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சுமார் 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-வஇ)

# 80 மில்லியனை தொட்டது இடம்பெயர்ந்தோர் தொகை

## ஐ.நா தகவல்

வொஷிங்டன், டிசெ. 12

உலகெங்கும் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை 80 மில்லியனை எட்டியுள்ளது என உலகில் வலுக்கட்டாய இடம்பெயர்வுகள் தொடர்பில் ஐ.நா அகதிகளுக்கான நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் உட்பட மோதல்கள், பாகுபாடுகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் மொத்த எண்ணிக்கை முதல் முறையாக 80 மில்லியனாக அதிகரித்துள்ளது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், உள்நாட்டுப் போர் நீடிக்கும் சிரியாவில் அதிக எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து வெனிசுலா, ஆப்கானிஸ்தான் மற்றும் தென் சூடான் அகதிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

கொரோனாவால் எல்லைகள் தற்காலிகமாக மூடப்பட்டமை மற்றும் உள்நுழைவுக் கட்டுப்பாடுகளால் அகதிகள் பாதுகாப்பான இடத்தை அடைவதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-வஇ)




## ஆப்கானில்

# பெண் ஊடகர் சுட்டுக்கொலை

காபுல், டிசெ. 12

கிழக்கு ஆப்கானிஸ்தானில் மலாலா மைவான்த் என்ற பெண் ஊடகவியலாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று பணிக்குச் செல்லும் வழியில் அவரது வாகனத்தின் மீது ஆயுததாரிகள் சரமாரி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதில் அவரும், அவரது சாரதியும் கொல்லப்பட்டுள்ளனர். தாக்குதலுக்கு எந்தத் தரப்பும் பொறுப்பேற்கவில்லை.

ஆப்கானின் எனிகாஸ் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் மைவான்த் பணியாற்றியுள்ளார். சமூக செயற்பாட்டாளரான இவர் பெண் ஊடகவியலாளராக தாம் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி அண்மைக் காலங்களில் அதிகம் பேசி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-வஇ)

# ஒவ்வாமை இருந்தால் தடுப்பு மருந்து இல்லை

## பிரிட்டன் அறிவிப்பு

லண்டன், டிசெ. 12

கடுமையான ஒவ்வாமை உடையவர்களுக்கு பைசர் - பயோஎன்டெக் தடுப்பு மருந்து வழங்கப்படமாட்டாது என்று பிரிட்டனின் மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

தடுப்புமருந்து போடப்பட்ட முதல் நாளில் இரு சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதையடுத்து முன்னெச்சரிக்கையாக, ஒவ்வாமை ஏற்படும் சாத்தியமுள்ளவர்கள் தடுப்பு மருந்தைப் பெறமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கொரோனாத் தடுப்பூசியை போட்டுக் கொள்பவர்கள் சிலருக்கு காய்ச்சல், தலைவலி, மூட்டுவலி போன்ற ஒவ்வாமைகள் ஏற்படும். அது வழக்கமானதுதான் என்றும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. (ம-வஇ)





இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber

LK Newspapers BTamil.com

10,000+ அங்கத்தவர்கள் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

Facebook இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

